DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.55/2025**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பகவத்சிங் |
| Husband Name | : | பாண்டி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2026.
( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது தூம்பக்குளத்தில் விநாயகர் பர்னிச்சரில் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். மேற்படி கடை **அ.சா.1** பிரபாகரனுக்கு என்பவருக்கு சொந்தமானது. அ.சா.3 மாரீஸ்வரன் என்னுடன் தான் வேலை பார்க்கிறார். வேன் கண்ணாடி வெளியில் உடைந்து கிடந்தது தெரியும், வேறு ஒன்றும் தெரியாது. எதிரி ஒன்றும் செய்யவில்லை. எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

கடந்த 04.04.2017ம் தேதி காலை சுமார் 11.00 மணியை போல நான் அ.சா.1 பிரபாகரன் கடையில் வேலை பார்த்தேன் என்றும், அந்த கடையில் அ.சா.2 மாரீஸ்வரன் வேலை பார்த்தார் என்றும், நாங்கள் வேலை செய்து

கொண்டிருக்கும் போது, அப்போது ஆஜர் எதிரி எங்கள் கம்பெனிக்கு வந்து **அ.சா.2** ஐ ஒக்காலோலி தேவிடியா மகனே என்று திட்டியும், அவரை கையாலும் அடித்துக்கொண்டிருந்தார் என்றும், அப்போது **அ.சா.1** பிரபாகரன் ஏன் இப்படி பேசுகிறாய், அடிக்கிறாய் என்று கேட்டதற்கு அவரையும் திட்டி எப்படிடா இங்கு கடை வைத்து நடத்துகிறாய் என்று கூறி அவரை மிரட்டி அவர் கடைக்கு முன்னால் நிறுத்தியிருந்த அவருக்கு சொந்தமான TN 67 AP 7643 என்ற பதிவு கொண்ட தோஸ்த் வாகனத்தின் முன்பக்க கண்ணாடியை கல்லால் அடித்து உடைத்துவிட்டார் என்றும் அது குறித்து அவர் போலீஸ் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்று சொல்லிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.24 17:41:02 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.